மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இத்திட்டம் முடியுந்தருவாயில் இருக்கிறது.

(இ) ரூபாய் 14 இலட்சம்.

(முற்பகல் 9.30)

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ஆர். எஸ். மங்கலம் கால்வாய்த் திட்டம் முடிந்தால் வைகை ஆற்றிலிருந்து ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்குத் தண்ணீர் வந்து பாசன வசதிக்கு உதவியாக இருக்கும். இந்த ஆண்டு வைகை சானலை ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்குப் போகக் கூடிய அளவுக்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. விரைவில் முடிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சண்முக நதியின் குறுக்கே பாலம்

* 817 வினா—புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி வட்டம், மானூருக்கருகில் சண்முக நதியின் குறுக்கே பெரிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி : மானூர் கிராமத்தில் இருக்கும் பத்தாயிரம் மக்கள் இந்தப் பாலம் அமையாத காரணத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெள்ள காலங்களில் சண்முக நதியில் ஏராளமாக வெள்ளம் வருவதால் ஆற்றைக் கடந்து செல்ல வழியே இல்லாத நிலையில் போக்குவரத்து கூட தடைப்பட்டு விடுகிறது. ஆகவே, அங்கு ஒரு பெரிய பாலத்தை அமைத்து அந்த ஊர்ப் பொதுமக்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சமீபத்தில் பழனி வட்டத்தில் இரண்டு பெரிய பாலங்களைக் கட்டி திறந்து வைத்து விட்டு வந்தோம். இப்போது அங்கு ஏற்கனவே தரைப்பாலம் இருக்கிறது. புதிய பாலம் கட்ட வேண்டுமென்றால் 12 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நிதி ஆதாரத்தைப் பொறுத்து இதைப் பரிசீலிக்கலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி : இப்படிப் பாலங்கள் கட்டுவதற்கு 12 லட்சம் ரூபாய் ஆகிறது, 13 லட்சம் ரூபாய் ஆகிறது என்று சொல்லுகிறார்கள். இது போன்ற ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று செஞ்சி ஊராட்சி ஒன்றியத்

தில் பத்தாண்டு, பதினைந்து ஆண்டு காலமாகக் கோரிக்கை இருக்கிறது. வெள்ள காலத்தில் ஜனங்கள் வெளியே வரமுடியாத நிலை ஏற்படுகிறது. அப்பேர்ப்பட்ட இடங்களிலிருந்து ஜனங்கள் வெளியே வர பாலம் கட்டித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதை அதர் ரோட்ஸ் ஸ்கீம் என்ற திட்டத்தின்கீழ்ப் பரிசிலிக்கலாம்.

New Dams in Nanguneri taluk.

* 818 *Q.*—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stages of Pachayar Dam and Kodumudi Dam schemes in Nanguneri taluk, Tirunelveli district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்திலுள்ள பச்சையாறு, கொடுமுடியாறு ஆகியவற்றின் குறுக்கே முறையே ரூபாய் 225 லட்சம், ரூபாய் 72 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், அணை கட்டுவதற்கான தலைமைப் பொறியாளரின் (பாசனம்) செயற் குறிப்புகள் பற்றி வருவாய்த்துறை வாரியத்துடன் கலந்தாலோசித்து அரசு பரிசீலித்து வருகிறது. வருவாய்த்துறை வாரியத்தின் குறிப்புரைகள் வரப்பெறுவதன் மேல் முடிவு எடுக்கப்படும்.

திரு. டி. கணபதி : இந்த இரண்டு அணைகளும் நாங்குநேரி, மேலப்பாளையம், இராதாபுரம் ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் உட்பட்டிருக்கிறது. அவை வறண்ட பிரதேசமாக இருப்பதாலும், 1974-75-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அடையாள நிதி ஒதுக்கம் செய்திருப்பதாலும் இதை விரைவில் நிறைவேற்றித் தர மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அடையாள நிதி ஒதுக்கம் செய்திருப்பதிலிருந்தே அரசுக்கு இருக்கும் அக்கறையை உணர்ந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. டி. கணபதி : பச்சையாறு அணைத் திட்டப் பகுதியில் அட்டாமிக் ஸ்டேஷன் அமைய இருப்பதால் அதற்குத் தண்ணீர் தேவையாக இருக்கிறது. ஆகவே, மழை காலத்தில் கடலில் சென்று விழுகும் தண்ணீரைப் பயன்படுத்தி அடாமிக் ஸ்டேஷனுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?